## SUBORDINATE COURT, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Original Suit No. | : | MCOP.No. 113 /2023 |
| Deposition of witness for | : | Petitioner |
| Serial No. of Witness | : | PW.1 |
| Name | : | திரு. ராமன் |
| Father/Husband Name | : | திரு. செங்கோடகவுண்டர் |
| Village | : | காரப்பட்டு |
| Taluk | : | ஊத்தங்கரை |
| Age | : | 56 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 11th November – 2025 | | |

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் இன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு, கணினி தட்டச்சு செய்யப்பட்டு நான் அதை படித்து பார்த்து சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன் என்று உறுதி கூறுகிறேன்.

<u>கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.</u>

| ம.சா.ஆ. | தேதி | ஆவணம் | தன்மை |
|---|---|---|---|
| 1 | 19.06.2023 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| 2 | 14.07.2023 | மனுதாரரின் டிஸ்சார்ஜ் சம்மரி | நகல் |
| 3 | 23.07.2023 | மனுதாரரின் டிஸ்சார்ஜ் சம்மரி | நகல் |
| 4 | | இருசக்கர வாகன பதிவு சான்று | நகல் |

| | | | |
|---|---|---|---|
| 5 | | காப்பீடு சான்று | நகல் |
| 6 | | 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் உரிமம் | நகல் |
| 7 | | ஆதார் அட்டை ( அசலுடன் சரிபார்க்கப்பட்டது ) | நகல் |
| 8 | | பேன் அட்டை ( அசலுடன் சரிபார்க்கப்பட்டது ) | நகல் |
| 9 | | வங்கி புத்தகம் ( அசலுடன் சரிபார்க்கப்பட்டது ) | நகல் |
| 10 | 19.06.2023 | விபத்து பதிவேடு | இணைதள நகல் |
| 11 | | காயசான்று | இணைதள நகல் |
| 12 | 24.07.2023 | வாகன ஆய்வு அறிக்கை | இணைதள நகல் |
| 13 | | மாதிரி வரைபடம் | இணைதள நகல் |
| 14 | 15.08.2023 | இறுதி அறிக்கை | இணைதள நகல் |

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை-

நான் கீழ் மத்தூரில் இருந்து வண்ணாம்பள்ளிக்கு சைக்கிளில் வந்தபோது பின்னாடி வந்த 1ம் எதிர்மனுதாரர் வாகனம் மோதிவிட்டது. நான் சாலையின் குறுக்கே திடீரென வளைந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் சாலை விதிகளை மதித்து மிதமான வேகத்தில் வந்தார் என்றாலும் நான் தான் சாலையின் குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றாலும்

விபத்து 1ம் எதிர்மனுதாரின் அஜாக்கிரதையால் நடக்கவில்லை என்றாலும் என் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.30,000/-சம்பாதிப்பதாக கூறுவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகமானது என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் எப்போதும் போல் எனது வேலையை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கூறியுள்ள இழப்பீட்டிற்கு எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.